முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.10.2023) திருவண்ணாமலையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திருவண்ணாமலை வடக்கு மாவட்டக் கழக துணைச் செயலாளருமான ந. பாண்டுரங்கன், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகள் பா.மதிமொழி, மருமகன் வ.பரந்தாமன் (எ) சங்கர் ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.10.2023) திருவண்ணாமலை, கலைஞர் திடலில் நடைபெற்ற திருவண்ணாமலை நகர கழகச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் மற்றும் நகர மன்றத் தலைவர் திருமதி நிர்மலா வேல்மாறன் தம்பதியரின் மகள் வே.காமினி – எஸ்.ரகுநாத் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! கலாநிதி வீராசாமி எம்.பி. முன்னிலை!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் நீட் தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரி கையெழுத்து இயக்கம்!

அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, அக். 24 -

புதுக்கோட்டை மாலையீடு எஸ்.ஆர் திருமண மண்டபத்தில் தி.மு.க. இளைஞரணி செயலாளரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணிகளின் சார்பில் நீட் தேர்விலிருந்து விலக்களிக்கக் கோரி ஐம்பது லட்சம் நபர்கள் கையெழுத்து இயக்கம் தொடக்க விழா நிகழ்ச்சி புதுக்கோட்டை மாலையீடு எஸ்.ஆர். திருமண மகாலில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் கழக அயலக அணி தலைவர் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராச்சாமி முன்னிலையில் தெற்கு மாவட்டச் செயலாளர் - தமிழக சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் கழக அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணை செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா,

மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணை தலைவர் த.சந்திர சேகரன், மாநில தொண்டர் அணி துணை செயலாளர் சுப.சரவணன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் செ.அசோக் பாண்டியன், மாநில விவசாய அணி துணை செயலாளர் வி.என்.மணி,

மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.எஸ்.கருப்பையன், க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, மாவட்டப் பொருளாளர் எம். லியாக்கத் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர் கீரை தமிழ் ராஜா, நகர கழகச் செயலாளர் ஆ.செந்தில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சு.சண்முகம்,

பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.பழனியப்பன், என்.சாத்தையா, எம்.செந்தில்குமார், ஆர்.செல்லத் துரை, சி.ஆர்.வி.சித்ரா, ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தவ. பாஞ்சாலன், வெ.முத்துக் கிருஷ்ணன், மு.க.ராம கிருஷ்ணன், என்.சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாசலம், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அ.இளங்குமரன், சி.சண்முகம், கே.பி.அய்யப்பன், ஆர்.ஆர்.சாமிநாதன், பி. அண்ணாதுரை, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ச.இளையசூரியன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், சிவக்குமார், அன்சாரி பாஷித், நா.ஸ்டாலின், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் பெ.தெய்வானை, ஆர். ரெத்தினசபாபதி, செ.பிரசன்னா, கோ.அண்ணாதுரை, மாலா ராஜேந்திர துறை, சின்னையா,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வை.கோ. ராஜன், எம். எம்.பாலு, மழையூர் ராமசாமி, வி.என்.எம்.பாலமுருகன், புத்தாம்பூர் சுப்பையா, எஸ்.வி.ஆர்.ஜெய்ஸ்டாலின், வே.ராஜேஸ், க.கவிவேந்தன், செந்தாமரை பாலு, தவசுமணி முருகேசன், வெற்றிச்செல்வன், கி. சுப்பிரமணியன், எஸ்.வி.ஆர்.ராஜா, டி.சுப்பிரமணியன், மா.மணிவேலன், பிரேம் ஆனந்த், பழனிவேலு, செ.ரமேஷ், சதீஷ், பால்ராஜ், கே.எம். கே.ரவிக்குமார், கை பழனிச்சாமி, காதர் கனி, ஆ.நாகராஜன், வழக்கறிஞர் ராமையா, மெஸ் மூர்த்தி, மெஸ் கார்த்தி. எம்.ஆர்.அன்பழகன், விஜயக்குமார், கண்மணி சுப்பு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த நிகழ்வில் காணொளி காட்சி மூலம் சென்னையிலிருந்து கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற 'நீட் விலக்கு நம் இலக்கு' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கம் காணொளி காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

மேலும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட தி.மு.க. இளைஞர் அணி மற்றும் பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசிய பேச்சை ஆர்வத்துடன் பார்த்துவிட்டு பின்னர் நீட்டுக்கு எதிராக தபால் அட்டையில் கையெழுத்திட்டு பெட்டியில் போட்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, இலண்டன், கிங்ஸ் பல்கலைக்கழகத்தில் 27.10.2023 அன்று நடைபெறவுள்ள பெரியார் – அம்பேத்கர் வாசகர் வட்டத்தில் சொற்பொழிவு ஆற்ற செல்லவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.